'மிசா' காலத்தில் சென்னைச் சிறையிலே பல்வேறு கொடுமைகளைத் தாங்கிக் கொண்ட இளைஞரான மு.க.ஸ்டாலின்தான்

இன்றைக்கு தமிழினத்தை வழிநடத்தும் தலைவராக உயர்ந்து நிற்கிறார்!

'மிசா வடுக்கள்' நூல் வெளியீட்டு விழாவில் – கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. உரை!

சென்னை, அக். 11-

கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., 'மிசா வடுக்கள்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், "மிசா காலத்தில் சென்னைச் சிறையிலே பல்வேறு கொடுமைகளைத் தாங்கிக் கொண்ட இளைஞரான மு.க.ஸ்டாலின் அவர்கள்தான், இன்றைக்குத் தமிழினத்தை வழிநடத்தும் தலைவராக உயர்ந்து நிற்கிறார்" என்று குறிப்பிட்டார்.

ஆதவன் என்டர்டெயின் மெண்ட் சார்பில் எஸ்.கே. ஸ்ரீதரன் தொகுத்த 'மிசா வடுக்கள்' நூல் மற்றும் 'மிசா ஆவணப் படம்' வெளியீட்டு விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. ஆற்றிய உரை வருமாறு:–

நாடாளுமன்றப் பொதுக்கணக்குக் குழுவின் சுற்றுப் பயணத்தில் இருந்த நான், இந்நிகழ்ச்சிக்காக இன்று பயணத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டு வந்திருக்கின்றேன். "இப்படி ஒரு நூல் வெளியாக இருக்கிறது; இதிலே நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கழகத்தின் தலைவர் அவர்கள் எனக்குக் கட்டளையிட்டார்கள்.

இந்த நூல் எனக்கு இன்று மாலை 4 மணிக்குத்தான் கிடைத்தது. விமான நிலையத்திலிருந்து தங்குமிடம் செல்லும் வழியிலும், பின்னர் அங்கிருந்து விழா அரங்கு வரும் வழியிலும் படித்துக்கொண்டே வந்தேன். ஏறத்தாழ 150 பக்கங்களைப் படித்துவிட்டேன். முன்னதாகவே நூல் கிடைத்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

இங்கே வரலாற்று ஆவணம் என்று எல்லோராலும் குறிப்பிடப்பட்ட இந்த நூலில், எனக்கு ஒரு இடம் இல்லாமல் போய்விட்டதே என்ற சிறு ஆதங்கம் இருக்கிறது. என்னிடம் கட்டுரையும் கேட்டு வாங்கவில்லை; ஆவணப்படம் எடுத்த போதும் என்னைச் சந்திக்கவில்லை. நான் ஏற்கனவே நூல் எழுதிவிட்டதாகக் காரணம் சொன்னார்கள்.

நான் எழுதிய நூலின் தலைப்பு மிகவும் ஈர்க்கக்கூடிய வகையில் இருக்கும்; ஆனால் அது மிசாவைப் பற்றியது என்பது பல பேருக்குத் தெரியாது. 'எதிர்பாராத திருப்பம்' என்று அதற்குத் தலைப்பிட்டேன். தலைவர் தளபதி அவர்கள்தான் அதனை வெளியிட்டார்கள். அப்பொழுது அவர் முதலமைச்சராக இருந்தார்; வெளியிடுவதற்குச் சிறிதும் தயங்கவில்லை.

சிறைக் கொட்டடியில் பல அவமானங்கள்!

முன்னால் பேசியவர்கள் சொன்னதைப் போல, சரியான நேரத்திலே இது வெளியாகியிருக்கிறது என்பதை விட, எந்த நிலையிலும் எதற்கும் தயார் நிலையில் இருக்கக் கூடியவர் அண்ணன் தளபதி ஸ்டாலின். வரலாற்றை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதில் திடமான எண்ணம் உடையவர் அவர். அந்த நூலை நான் எழுதி வெளியிட்ட போது, பெருமளவில் எல்லோராலும் படிக்கப்பட்டது; தம்பி ஸ்ரீதரன் கூட அதனைப் படித்திருக்கிறார்.

அவசரநிலைக் காலத்தில், சிறைக்கொட்டடியில் கைது செய்யப்பட்டவர்கள் மீது தாக்குதலும் அடியும் உதையும் நடந்தது சென்னையில்தான். பல அவமானங்கள் இழைக்கப்பட்டன. அதற்கு அங்கிருந்த சிறை அதிகாரியே காரணம் என்பதையும் எல்லோரும் குறிப்பிட்டார்கள். மற்ற சிறைச்சாலைகளில் அப்படி தாக்குதல் இல்லையே தவிர, துன்பங்கள் எல்லா இடங்களிலும் இருந்தன. தழும்புகள் இல்லையென்றாலும், வலி இருக்கிறது.

என் நூலுக்கு 'எதிர்பாராத திருப்பம்' என்று தலைப்பிட்டதற்குக் காரணம், இளவயதில் எனக்குள் கனிந்த ஒரு கனவு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வேண்டும் என்பதுதான். அதை நோக்கியே சென்று கொண்டிருந்தேன்; அதற்காகவே ஆங்கில இலக்கியம் எடுத்துப் படித்தேன்.

ஆனால், கழக மாணவரணியில் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் கைது செய்யப்பட்டுச் சிறைக்குச் சென்றேன். அது என் வாழ்க்கையின் மிகப்பெரிய திருப்புமுனையாக மாறியது.

ராபர்ட் ஃபிராஸ்ட் எழுதிய கவிதையில் சொல்வதைப் போல:

"கானகத்திலே இரண்டு சாலைகள் பிரிந்தன; யாரும் பயணம் செய்யாத பாதையை நான் தேர்ந்தெடுத்தேன். அதுவே எல்லா மாற்றங்களுக்கும் காரணமாக அமைந்தது.

அதைப்போல, சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்தவுடன், என் கனவைத் தொடர்ந்து நிறைவேற்ற அந்த வழியில் செல்வதா அல்லது கலைஞருக்குப் பின்னாலே நடக்கத் தொடங்கியதை அப்படியே தொடர்வதா என்று அந்தச் சிறை வாசலில்தான் முடிவெடுத்தேன். இதெல்லாம் கதை அல்ல; நடந்தது.

கைதானபோது எனக்கு வயது 21; விடுதலையான போது 22. வெளியே வந்து, "இந்த மதில் சுவர்களுக்குப் பின்னால் ஒரு வருடம் இருந்தோம் என்று யோசித்துத் தீர்க்கமான முடிவெடுத்தேன். "இனி எங்கு சென்றாலும் சிறைக் கைதி என்ற முத்திரை தொடரும்; நாம் தவறான பாதையில் செல்லவில்லை. ஜனநாயகத்திற்காக ஆட்சியைப் பறிகொடுத்த தலைவனுக்குப் பின்னால் காலமெல்லாம் நடந்திட வேண்டும் என்று முடிவெடுத்து அவரைத் தொடர ஆரம்பித்தேன்.

என்னைத் தாய்க்கோழியாகப் பொத்தி வளர்த்தார். இன்றைக்கும் அந்தப் பந்தம் இன்றைய கழகத் தலைவரோடு எனக்கு 50 ஆண்டு காலமாகத் தொடர்கிறது. அவர் என் மீது கொண்டிருக்கிற அன்பு அளவற்றது. அதனால்தான் இந்த நிகழ்ச்சியில் நானும் கலந்து கொள்ள வேண்டும் என்று பணித்தார்கள். அதன் பொருட்டுதான் நான் ஒரு முக்கியமான பணியைக் கூட பாதியில் விட்டுவிட்டு ஓடோடி வந்திருக்கிறேன்.

நூலினைப் படித்தேன். சிறையில் இருந்த வழக்கறிஞர் துரைசாமி, ஐயா வீரமணி, அண்ணன் சோமா போன்றவர்கள்; அதேபோலச் சிறையில் இருந்தவர்களின் பிள்ளைகளான தம்பி கலாநிதி, அண்ணன் ஆர்.டி.சீத்தாபதியின் மகள் அண்ணன் சிட்டிபாபு அவர்களின் மகன் எனப் பலர். நான்கு நாட்கள் மட்டுமே உள்ளே இருந்துவிட்டு வெளியே வந்தாலும், ஆனால், அந்தக் காலத்தில் நடந்தவைகளைப் பக்கத்திலிருந்து பார்த்து உணர்ந்த தோழர் டி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், சிறைச்சாலையில் வேறு கைதியாக இருந்தாலும் எங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்த தோழர் தியாகு என்று பல பேர் அதில் நிறைய எழுதியிருக்கிறார்கள்.

அண்ணா – கலைஞர் காலத்திலிருந்து பின்பற்றப்படும் பாரம்பரியம்!

கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் எழுதியிருக்கிறார்கள். அதனை ஊன்றிப் படிக்கும்போது சில வேறுபாடுகள் தெரியலாம். இங்கே தோழர் பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும் போது, "இங்கே வந்துவிட்ட காரணத்தால் அரசியல் மாற்றம் நிகழ்ந்துவிட்டதாக யாரும் கருதிவிட வேண்டாம் என்றார். அப்படி நாங்கள் அவசரப்படுகிறவர்கள் அல்ல.

இலக்கிய நிகழ்வுகள், சமுதாய நிகழ்ச்சிகள் மற்றும் வரலாற்றை நினைவு கூர்கிற தருணங்களில், பங்கேற்பாளர்கள் இணைந்து கலந்து கொள்ளும்போது அரசியல் அடையாளங்கள் பின்னுக்குப் போய்விடுகின்றன. இது பேரறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞர் காலத்திலிருந்து உருவாக்கப்பட்டுப் பின்பற்றப்படும் பாரம்பரியம். நாங்கள் தொடர்ந்து அதைக் கடைப்பிடிக்கிறோம்.

தம்பி ஸ்ரீதரன் அவர்கள், தோழர்கள் டி.கே. ரங்கராஜனிடமோ பாலகிருஷ்ணன் அவர்களிடமோ கட்டுரை பெற்ற போது, "எங்களோடு கூட்டணியில் இருந்தவர்கள் இப்போது இல்லை என்று அவர் குறிப்பிட்டார். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அவசரநிலையை எதிர்த்தவர்களில் அவர்களும் முக்கியமானவர்கள். அவர்கள் இயக்கத்தைச் சார்ந்த பலர் கைதாகியிருந்தார்கள்; பலர் தலைமறைவாக இருந்தார்கள்.

தலைமறைவு வாழ்க்கை என்பது அவர்களுக்குப் பழக்கமான ஒன்று; பயிற்றுவிக்கப்படுகின்ற பாடங்களில் அதுவும் ஒன்று. ஆனால் தி.மு.க. அப்படிப்பட்டது கிடையாது; நேரடியாகக் களத்தில் இறங்கி, வருவதை எதிர்கொண்டுதான் பழக்கம். இருவருக்கும் இரண்டு இயல்புகள் உண்டு என்றாலும், லட்சியக் குணம் ஒன்றாகத்தான் இருந்தது.

இந்த இடத்திலே சிலவற்றைச் சொல்ல வேண்டும். திரையிடப்பட்ட ஆவணப்படத்தில் சிறைச்சாலையில் நடைபெற்ற சித்திரவதைகளையெல்லாம் படம்பிடித்துக் காட்டினார்கள். அதுபோல இந்த நூலிலும் அந்தக் காலகட்டத்தில் நடந்தவைகளைப் பற்றிப் பலரும் எழுதியிருக்கிறார்கள்.

எதிர்காலத்திற்கான நூல்!

நான் கூடச் சிறு ஆதங்கத்துடனும் பொறாமையுடனும் தம்பி ஸ்ரீதரனிடம் சொன்னேன்: "மீண்டும் என்னிடம் ஒரு கட்டுரை வாங்கி இதில் இணைத்துக் கொள் என்று. ஏனெனில், பின்னாளில் மிசாவைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் தேடுகின்ற நூல்களில் இது முக்கியமான ஒன்றாக இருக்கும். எழுதப்படுகின்ற நூல் என்பது அந்தக் காலகட்டத்திற்கு மட்டும் உரியது அல்ல; அது எதிர்காலத்திற்கானது.

காலங்கள் கடந்து 50 ஆண்டுகள் கழித்து இன்றைக்கு இதைப் பேச வைத்த அந்த வாய்ப்பைத் தந்த இன்றைய ஆளுங்கட்சியினருக்கு நன்றி சொல்ல வேண்டும்! இல்லாவிட்டால் ஒரு தலைமுறைக்கு அவசரநிலை என்றால் என்னவென்றே தெரியாமல் போயிருக்கும். அவசரநிலை என்றால் என்ன என்பதை விட, அதன் பின்விளைவுகளும் கொடுமைகளும் என்னவென்பதை அறியாத ஒரு தலைமுறை இன்று ஓங்கி வளர்ந்து நிற்கிறது.

அரசியலை இன்னும் முழுமையாக உணராத சூழலில், ஒரு கொடுமையான காலகட்டம் நடந்திருக்கிறது; அது மீண்டும் நடப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. இன்றைக்கு மிசா சட்டம் இல்லையே தவிர, UAPA என்ற சட்டம் இருக்கிறது. அது பலருக்குத் தெரியாது. அது இன்னும் அரசியல்வாதிகளை தொடவில்லை; சமூக ஆர்வலர்களையும், பத்திரிகையாளர்களையும் மட்டுமே கை வைத்துள்ளது. இப்படி ஒரு சட்டம் இருப்பதே பலருக்குத் தெரியாது. அப்படித்தான் 1971இல் இயற்றப்பட்ட மிசா சட்டம், தோழர் பாலகிருஷ்ணன் சொன்னதைப்போல 1975இல் கூர்மையாக்கப்பட்டது.

அவசர நிலைப் பிரகடனம்!

இங்கு வந்திருக்கக்கூடிய இன்றைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்காகச் சொல்வேன், இந்திராகாந்தி அம்மையாரின் தேர்தல் செல்லாது என்றும், ஆறு ஆண்டுகள் அவர் தேர்தலில் நிற்க முடியாது என்றும் அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. தன்னுடைய அரசியல் எதிர்காலம் இருண்டு போனது என்ற நிலையில், அதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக அவர் அரசியல் சட்டத்தின் 352, 356, 360 ஆகிய பிரிவுகளைப் பயன்படுத்தி அவசரநிலையைப் பிரகடனம் செய்கிறார்.

அதற்கு முன்னால், 1971இல் முதன்முறையாகத் தி.மு.க. காங்கிரஸோடு கூட்டணி சேர்கிறது. அதுவரை எதிரும் புதிருமாகப் போட்டியிட்டு கடுமையாக விமர்சித்து வந்த கட்சிகள் அவை. அந்தத் தேர்தலில், தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் இதுவரை யாரும் பெறாத அளவிற்கு 184 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே வெற்றி பெற்றது. நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸுக்குக் ஒதுக்கப்பட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்றது; தி.மு.க.விற்கும் இடங்கள் கிடைத்தன. அவர்கள் கொண்டு வந்த முற்போக்குத் திட்டங்களான மன்னர் மானிய ஒழிப்பு, வங்கிகள் தேசியமயமாக்கம் போன்ற முற்போக்கான திட்டங்களுக்கு ஆதரவு அளித்து நாங்கள் கூட்டணி கரம் கோர்த்தோம்.

இந்த நிலையில்தான், இந்திரா காந்தியின் தேர்தல் தொடர்பான தீர்ப்பு வந்தவுடன் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. அந்த நாளைத் தயவுசெய்து குறித்துக் கொள்ளுங்கள்: 1975 ஜூன் 25.

அன்றைய தினம் காங்கிரஸ் அல்லாத அரசு குஜராத்தில் நடைபெற்றது. அது 'ஜனதா மோர்ச்சா' என்ற கூட்டணிக் கட்சி ஆட்சி; பாபுபாய் ஜே. படேல் முதலமைச்சர். தமிழ்நாட்டில் காங்கிரஸோடு கூட்டணி சேர்ந்து வெற்றி கண்ட திமுக ஆட்சி; கலைஞர் முதலமைச்சர்.

இந்திரா காந்தி அம்மையார் "Indiscipline and violence in India என்று குறிப்பிட்டது தமிழ்நாட்டையும் குஜராத்தையும் தான். ஆனால் குஜராத் அரசு சில நாட்களிலேயே அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாத காரணத்தால், நிதிநிலை அறிக்கையைக் கூடச் சட்டசபையில் நிறைவேற்ற முடியாமல் கலைந்துபோனது.

கலைஞர் செயல்பட்ட வேகம்!

நாம் கூட்டணியில் இருந்த போதிலும், ஜூன் 25 அன்று அவசரநிலை பிறப்பிக்கப்பட்டவுடன் கலைஞர் செயல்பட்ட வேகத்தைப் பார்க்க வேண்டும்; ஆவணப்படம், வலி இதெல்லாம் நாமாக வரவழைத்துக் கொண்டது. திணிக்கப்படுவது வேறு; தெரிந்தே ஒன்றை வரவழைத்து ஏற்றுக் கொள்வதற்குப் பெயர்தான் தியாகம் என்பது. தெரிந்தே ஒரு துன்பத்தை தாங்கிப் கொள்வோம் என்பதற்குப் பெயர்தான் களத்தில் நிற்போம் என்ற தெளிவான உறுதி.

ஜூன் 27, அதாவது 48 மணி நேரத்திற்குள், தி.மு.க.வின் செயற்குழுவைக் கூட்டி கலைஞர் நிறைவேற்றிய தீர்மானம் என்ன தெரியுமா? "இது சர்வாதிகாரத்தின் தொடக்கம்!

"அவசரநிலையைத் திரும்பப் பெறுங்கள்; சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்யுங்கள்; ஜனநாயகத்தை மீட்கவும் என்று தீர்மானம் நிறைவேற்றினார். அதனை இந்திரா காந்தி அம்மையாருக்கு அனுப்பி வைத்துவிட்டு, ஜூலை 6ஆம் தேதி சென்னை கடற்கரையில் மாபெரும் கூட்டத்தைக் கூட்டி, வந்திருந்த மக்களையும் சேர்த்து அந்த முழக்கத்தை எழுப்ப வைத்த ஒரே தலைவர் இந்தியாவில் கலைஞர் மட்டும்தான்.

அப்பொழுது இந்திரா காந்தி அம்மையார் அங்கிருந்து நயமான ஒரு செய்தியை அனுப்பி வைத்தார்: "உங்களுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இல்லை. எனக்கு அரசியல் எதிரிகள் வடக்கே இருக்கிறார்கள்; என் கட்சியிலேயே சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்காக நான் இதைச் செய்கிறேன். நீங்கள் ஏன் அதை எதிர்க்கிறீர்கள்?

அடக்கு முறையை கண்டு அஞ்சியதில்லை தி.மு.க.!

அதற்குத் தலைவர் கலைஞர்: "தனிப்பட்ட முறையில் உங்களுக்கும் எனக்கும் அன்பு உண்டு என்பதை எல்லாம் மீறி, அடிப்படையில் இந்த நாட்டின் ஜனநாயகம் முக்கியம். அது எந்த வகையிலும் பறிபோக நான் அனுமதிக்க



மாட்டேன்! என்று சொன்னார்.

கழகத்தின் இருவண்ணக் கொடியைக் கையில் ஏந்தினோம்; கலைஞருக்குப் பின்னால் நடக்கத் தொடங்கினோம் என்றால், எங்கள் கம்பீரம் இன்னமும் குறையாததற்குக் காரணம். அதே வழியில் இன்றைக்குத் தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்களும் நடைபோடுகிறார் என்பதுதான் எங்களுக்குள் உள்ள தனிப்பட்ட சிறப்பு. நாங்கள் எந்தவித அடக்குமுறையைக் கண்டும் அஞ்சி ஓடியதில்லை.

ஏதோ சிலர், ஏதோ இருப்பதாகக் கருதிக் கொண்டு, அவர்கள் காட்டுகிற இந்த பூச்சாண்டிகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே தவிர, அவற்றை நாங்கள் வேறு மாதிரி கருதுவதில்லை.

"Tolerance is not Acceptance! பொறுத்துக் கொண்டிருப்போம் என்பது, ஏற்றுக்கொண்டோம் என்பதோ அல்லது கையாலாகாத்தனம் என்பதோ அல்ல. திறமையானவன் சரியான நேரத்திற்காகக் காத்திருப்பான். அது அண்ணா சொல்லித் தந்தது. "We know when to raise our arms, அப்போது தான் எங்களின் குரலும் உயரும்; எங்களின் செயலும் மாறும்!

தி.மு.க.வின் சிறப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றைப் பார்க்கின்ற போது, பதவிக்காக அலைகின்றவர்கள் அல்ல. ஆட்சி கிடைக்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது ஆட்சியில் இரண்டு இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவோ, எதை வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால், இருந்த ஆட்சியைத் துறந்த ஒரு கட்சி தி.மு.க.! அதுதான் எங்களுடைய சிறப்பு.

பெரும்பான்மை இல்லாமல் இல்லை; ஆதரவைத் தேடி அலைந்தோம் என்பதில்லை. 184 இடங்களோடு இருந்த நேரத்தில், ஆட்சியைத் தூக்கி எறியத் தயார், "எனக்கு ஜனநாயகம்தான் வேண்டும்! என்று சொல்லிவிட்டு, இந்தியா முழுவதும் பத்திரிகைத் தணிக்கை இருந்தது. பொதுக்கூட்டங்கள் கிடையாது. இந்தச் சூழலில் தமிழ்நாட்டில் மட்டும் தான் பொதுக்கூட்டங்கள் நடந்தன. தோழர்கள் அதைச் சொல்லி இருக்க வேண்டும்.

இங்குதான் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. தொழிற்சங்க வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். அவசரநிலைக் காலத்திலே நான் போராட்டங்களில் பங்கேற்றிருக்கிறேன் மாணவனாக. இங்கே பொதுக்கூட்டங்கள் தொடர்ந்து நடந்தன. காமராஜர் வந்து பேசினார். பலபேர் பேசிக் கொண்டிருந்தார்கள். எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அவசர நிலை என்பதே வெளியே தெரியாத அளவிற்கு ஜனநாயகத்தைக் காப்பாற்றிய பெருமை, தி.மு.க.வுக்கும் கலைஞருக்கும் உண்டு.

இது பொறுக்க முடியவில்லை அவர்களுக்கு. "என்ன இது, இந்த ஒரு மாநிலம் மட்டும்? ஜார்ஜ் பெர்னாண்டஸ் வந்து அடைக்கலம் புகுந்தார்; தங்கிய இடம் முரசொலி அலுவலகம். பேராசிரியர் நாகநாதன் அவர்கள் கிளம்பிவிட்டார் உடல்நலன் காரணமாக. அவர் நிறையச் சொல்லி இருக்கிறார். அந்த நேரத்தில் கலைஞருடனே இருந்தவர் அவர். கலைஞருடைய ஒவ்வொரு அசைவையும் தெரிந்தவர். அவர் எடுத்த முடிவுகள், செயல்படுத்திய விதம் எல்லாவற்றையும் கூட இந்தக் கட்டுரைகளிலே கூட அவர் சொல்லி இருக்கின்றார். எல்லோரும் ஒவ்வொரு கோணத்தில் சொல்லி இருக்கின்றார்கள்.

அப்படி எல்லோருக்கும் அடைக்கலம் கொடுத்த சூழலில் தான், 1976 ஜனவரி 30 காந்தி நினைவு நாள் அரசு விழா நடைபெறுகிறது. ஆளுநர் கே.கே. ஷா பேசுகிறார்: "தமிழ்நாட்டில் காந்திய வழியில் ஆட்சி நடக்கிறது. அடுத்த நாள் 31ஆம் நாள் அவரே கையெழுத்திடுகிறார்: "இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுப் போனது என்று.

காந்திய வழி என்பது என்ன என்பது அவர்தான் விளக்க வேண்டும்; ஆள் இல்லை இப்போது. 31இலே அவர் கொடுத்த அந்த அறிக்கையின்படி, 356வது பிரிவு அதுதான். ஆளுநர் அறிக்கை தர வேண்டும், 'or otherwise' என்று ஒன்று இருக்கிறது. அன்று இரவு ஆட்சி கலைக்கப்படுகிறது.

இந்தியாவில் ஒரு தீவு!

கலைக்கப்பட்ட உடனே வேட்டையாடுதல் நடைபெறுகிறது. எல்லோரும் கைது செய்யப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கில் டி.ஐ.ஆர் என்ற பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். மிசாவிலே சில பேர் கைது செய்யப்படுகிறார்கள். மிசாவிலே கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகபட்சமாக 500 வரும். கலைஞர் 'இந்தியாவில் ஒரு தீவு' என்ற நூலில் அதை முழுமையாக எழுதி இருக்கிறார்.

நான் இன்னொரு உண்மையும் இப்போது சொல்லியாக வேண்டும். யாராவது போய் தேடி, "உன் பேரைக் காணவில்லை; இப்போது எப்படி மு.க. ஸ்டாலின் சிறைக்கே போகவில்லை என்கிறார்களோ, அதுபோல சிவாவும் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று கருதக்கூடாது என்பதற்காக, என்னுடைய இயற்பெயர் என் தந்தை வைத்தது, நான் பிறந்த மூன்றாவது மாதம் அவர் மறைந்த காரணத்தால், பெயரை மாற்றவில்லை, என் பெயர் சிவசண்முகம்.

பின்னாளில் அழைத்த பெயர் 'சிவா' என்பது. 'சிவா' என்று மாறி, 'மிசா சிவா'வாகி, பின்னர் கலைஞரால் 'திருச்சி சிவா'வாக மாற்றப்பட்டது. எனவே என்னுடைய வாரண்டில் இருந்த ரொம்பத் தெளிவான வாசகம்: "It is necessary to detain Siva alias Sivasanmugam, Son of R. Natesan, residing at Trichy என்று இருந்தது.

எனக்குத் தெரியாது போலீசார் என்னை விரட்டுகிறார்கள் என்று. ஆனால் தேடுகிறார்கள் என்று தெரிந்து நான் ஓடி ஓடி, அப்போதெல்லாம் சைக்கிளில்தான் போலீஸ் துரத்துவார்கள். அவர்கள் இந்தப் பக்கம் வந்தால் நான் இன்னொரு பக்கம் போய்விடுவேன். ரொம்பச் சிரமப்பட்டார்கள். கல்லூரி வரை வந்துவிட்டார்கள். கல்லூரியிலிருந்தும் நான் தப்பிக்கிறேன்.

14 நாட்கள் கழித்து, கடைசியாகப் பேர்வெல் பார்ட்டி நடந்த அடுத்த நாள் வீட்டுக்கு வந்து படுத்த காலையிலேயே வந்து, "வாருங்கள் என்று கூட்டிக்கொண்டு போய் நிலையத்திலே வைத்து சொன்ன வார்த்தை: "யார் இவர்? என்று அங்கு இருந்தவர் கேட்டார். "அந்த ஸ்டுடெண்ட்டைப் பிடிச்சுக்கிட்டு வந்துவிட்டோம். "மனோகரா, அழைத்து வந்தாயா, இழுத்து வந்தாயா? என்கிற மாதிரி, "கூட்டிப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, "பிடித்துக்கொண்டு வந்துவிட்டோம் என்று சொன்னார்கள்.

பின்னர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வந்து எல்லோருக்கும் போன் போட்டுச் சொன்னார்: "அந்த ஸ்டுடெண்ட்டைப் பிடிச்சாச்சு! "பிடிச்சாச்சு என்றால், அப்போதுதான் என்னை ரொம்பத் தேடி இருக்கிறார்கள் என்று தெரியும்.

பிறகு, என்னென்னவோ நடந்தது. நான் அதைப்பற்றி இப்போது அதிகமாகப் பேசவில்லை. புரொஃபைல் போட்டோ எல்லாம் எடுத்துக்கொண்டு போய் உள்ளே போட்டார்கள். ஒரு வருஷம் கழித்துதான் வெளியில் வந்தேன்.

இடையில் நான் ஒரு முறை எம்.ஏ. தேர்வு எழுதப் போனேன். ஆறு போலீஸ், துப்பாக்கி ஏந்தியவர்களோடு சென்றேன். தேர்வு நடக்கிற நாள் அன்று என் கல்லூரி காலியாக இருந்தது. சரி, நமக்கு மட்டும் சிறப்புத் தேர்வு போல இருக்கிறது என்று கருதினால், எல்லோருக்கும் தான் தேர்வு நடந்தது. ஆனால் எல்லாம் மரத்துக்குப் பின்னால் ஒளிந்திருந்து பதுங்கிப் பார்த்தார்களே தவிர, பக்கத்தில் யாரும் வரவில்லை. ஒரு தனி அறையில் வைத்து எழுதச் சொன்னார்கள். மீண்டு வந்தேன். இது ஒரு புறம்.

ஆனால் சென்னைச் சிறையிலே முதல் இரண்டு நாட்களில் நடந்த கொடுமை, காலமெல்லாம் மறக்க முடியாத ஒரு வடுவாக மாறிவிட்டது என்பதைத்தான் தம்பி ஸ்ரீதரன் ஆவணப்படுத்தி இருக்கிறார்.

அத்தோடு மட்டுமில்லாமல், அது ஏன் நடந்தது என்பதற்கு அவசரநிலைக் காலத்தைப் பற்றி அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், அரசியலில் ஈடுபாடு உள்ளவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள், பாதிக்கப்பட்டு இன்றைக்கு இருப்பவர்கள் ரொம்பக் கொஞ்சம். ஐயா வீரமணி இருக்கிறார், தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார், நான் இருக்கிறேன், அண்ணன் சோமா இருக்கிறார். இப்படி ரொம்ப ரொம்பக் குறைவு.

திருச்சியில் இருந்தவர்கள் 100 பேர். அதில் இப்போது இருப்பதே ஒன்பது பேர்தான். திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை என்று ஒருங்கிணைந்த மாவட்டங்களில் இருந்து 102 பேர் இருந்தோம். அது என்னவோ அவருடைய நம்பரைப் பற்றி ஏதோ 1576 என்றார். என் நம்பர் 171. நான் நாடாளுமன்றத்தில் போய் மாநிலங்களவையில் உட்காரும் போது, ஒரு தடவை எனக்கு டிவிஷன் நம்பராக அது வந்து விட்டது. அப்பொழுது சொன்னேன்: "நம்பர் விடமாட்டேன் என்று, நம்மை விரட்டிக்கொண்டே இருக்கிறது பாருங்கள்!

ஆனால் இங்கே சிறையிலே பிடிபட்டவர்களைத் தனிப்பட்ட முறையிலே என்று காரணம் சொல்கிறார்கள். அந்த அளவிற்கு குரோதம் என்றால், இந்த அளவுக்கு இருக்க முடியாது.

தலைவனாக உயர்ந்து நிற்கிறார்!

திரைப்படத்தில் வருவது போல, **ஒவ்வொரு அறையாகத் திறந்து அடித்து, இரத்தம் சிந்த மேலே ஏறி பூட்ஸ் காலால் மிதித்து, உணவிலே வேப்பெண்ணெயைக் கலந்து, மண்ணைக் கலந்து, சிறுநீரைக் கலந்து, ஏதோ விடுதலைப் போராட்டக் காலத்திலே நடைபெற்ற சித்திரவதைகளைப் போல, இரண்டு நாட்கள் சென்னைச் சிறையிலே நடந்த அவலம் கொஞ்ச நஞ்சமில்லை. அதைத் தாங்கிக்கொண்ட அந்த இளைஞன்தான் இன்றைக்குத் தமிழ் இனத்தை வழிநடத்துகிற ஒரு தலைவனாக உயர்ந்து நிற்கிறார்.**

இப்பொழுது நான் இந்த பின்னணியையெல்லாம் சொன்னதற்குக் காரணம்? என்ன மிசா? ஏன் மிசா? இவர்களை ஏன் கைது செய்தார்கள் என்று மேலோட்டமாக யாரும் பேசிவிடக் கூடாது. அரசியல் காரணங்களுக்காக ஒரு ஆட்சியாளரால் கொண்டுவரப்பட்டதை, அரசியல் ஆதாயம் கருதாமல் எதிர்த்து நின்ற கட்சி தி.மு.க. என்ற காரணத்தால், அதில் இருந்தவர்கள் பாதிக்கப்பட்டபோது, கலைஞர் தனி மனிதனாக விடப்பட்டு, படைகள் புடைசூழச் சென்று கொண்டிருந்த முதலமைச்சர், தனி மனிதனாக உட்கார்ந்து, பக்கத்தில் யாரும் நிற்கவே முடியாது என்ற நிலை வந்தது.

திருச்சி சிறையிலே நாங்கள் இருந்தபோது, திடீரென்று ஒரு நாள் ஒருவரை அழைத்து வந்தார்கள். அவர் ஊர் சீர்காழி. யார் என்று பல பேருக்குத் தெரியவே இல்லை. ஒருவர், "எங்கள் ஊராயிற்றே இவர்; கட்சியிலே ஒன்றும் தீவிரமில்லையே என்று போய், "என்ன நடந்தது? என்றார். "ஒன்றுமில்லை. நேற்றைக்குக் கலைஞர் அங்கே ஒரு நிகழ்ச்சிக்கு வந்தார், திருமணத்திற்கு. என் வீட்டில் கூப்பிட்டுச் சோறு போட்டேன். காலையில் இங்கே கூட்டி வந்துவிட்டார்கள். கலைஞருக்கு ஒரு வேளை உணவளித்தார் என்பதற்காக மறுநாள் சிறைக்கதவு திறக்கப்பட்ட காலகட்டம் அது! கலைஞரோடு போய் வீட்டிலே போய்ப் பார்த்தால் மிரட்டப்பட்டது.

என்னுடன் பேராவூரணி கிருஷ்ணமூர்த்தி என்று ஒருவர் இருந்தார். அவர் பார்ப்பதற்கு ஒரு சினிமா கதாநாயகன் மாதிரி இருப்பார். நல்லாச் சிவப்பாக, அந்த நாஞ்சிலார் மாதிரி ஒரு வேட்டி கட்டி, சட்டை போட்டு, துண்டைத் தரையில் தள தளவென்று தவழ தவழப் போட்டு நடப்பார். வாய் நிறைய வெற்றிலைப் பாக்கு இருக்கும்.

இதைவிட கொடுமையான காலம் வேண்டுமா?

அவரை அவர் வீட்டில் பார்க்க வருகிறார்கள். அப்போது வரும்போது அவர் சொல்கிறார்: "என்ன வாரம் வாரம் துணியைக் கசக்கி எடுத்துட்டு வர்றே? ஏன் அயன் பண்ணி எடுத்துட்டு வந்தா என்ன? சிறைக்கு வந்தா இப்படி அலையணுமா? என்று கோபமாகக் கேட்டபோது, அந்த அம்மா சொன்னார்கள்: "இல்லைங்க, சலவைத் தொழிலாளி எங்கள் துணியையெல்லாம் எடுத்துப் போய் சலவை செய்து மடித்துத் தருகிறார், உங்களுடையதை வாங்க மாட்டேன் என்கிறார். "ஏன்? "கருப்புச் சிவப்புத் துண்டோ வேட்டியோ தன் வீட்டில் காய்ந்தால், இவரைத் தி.மு.க. என்று போலீஸ் மிரட்டுவதாகச் சலவைத் தொழிலாளி அஞ்சுகிறார் என்று சொன்னார்கள்.

இதைவிட ஒரு கொடுமையான காலம் வேண்டுமா? இன்றைக்குப் பெருமையாக நடக்கிறோம். "இது எங்கள் வேட்டி, இது எங்கள் நிறம், எங்கள் கொடி, எங்கள் மானம் என்று சொல்கிறோமே! அந்தக் கொடியை உயர்த்திய உடனே, ஒரு உயர்வு வருகிறது. நான் என்றைக்கு மிசாவில் இருந்து வந்து, 80இல் இந்த வேட்டியைக் கட்ட ஆரம்பித்தேனோ, வேறு வேட்டியைக் கட்டுவது இல்லை. என் திருமணத்திற்குக்கூட நான் வேறு கரை போட்ட வேட்டி கட்ட மாட்டேன் என்று பிடிவாதம் பண்ணினேன்.

அப்படிச் சொல்கிற இந்த வேட்டியைச் சலவைத் தொழிலாளி தொடப் பயந்த காலம், அவசரநிலைக் காலம்! இதுக்குமேல் என்ன வேண்டும்? அதையும் கடந்து கழகம் வென்றதே, அதுதான் வரலாறு! ஒரு அலை அடித்தால் காணாமல் போவார்கள்; ஒரு அரசியல் மாற்றம் வந்தால் அடித்த சுவடே இருக்காது. ஆனால் எங்கள் மீது விழுந்த அடியும் நாங்கள் தாங்கிய கொடுமைகளும் கொஞ்ச நஞ்சமல்ல!

கலைஞர் கடைசி நாள் வரை போராளியாகவே இருந்தார். அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் இங்கே இருக்கிறார்கள், அங்கே இருக்கிறார்கள். அந்தத் தோளில் துண்டைப் போட்டு அப்படி ஒரு சிலுப்பு சிலுப்பினார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அதற்குப் பிறகு அவரைப் பார்க்கணும்... நாங்கள் அவரை நேசித்ததே அதற்காகத்தான்!

அந்த மாணவர் பருவத்திலே எங்களைக் கவர்ந்தார் அவர். இப்போது தம்பி, "என்னை இன்ஸ்பிரேஷன் என்றார். "நான் உங்களைப் பேசி இன்ஸ்பையர் செய்வேன்; தனிப்பட்ட முறையில் கொஞ்சம் பாடம் எடுத்திருக்கிறேன். ஆனால் கலைஞருடைய ஒவ்வொரு அசைவும் எங்களைக் கவர்ந்தது. ஒவ்வொரு செயல், ஒவ்வொரு சொல், அவருடைய துணிச்சல், அவருடைய ஆற்றல்... அதில் வீழ்ந்தவர்கள், அதிலிருந்து மீளவே முடியாது என்பதை விட, "அதுதான், தலைவர் என்றால் அவர்தான்! என்கின்ற ஒரு மனநிலை எங்களுக்கு வந்தது.

நிலையான ஆட்சி!

அப்படிப்பட்ட அந்தத் தலைவனால்தான் ஒரு அவசரநிலையை எதிர்த்து நிற்க முடிந்தது; ஒரு ஆட்சியை இழக்க முடிந்தது. அடுத்து, அடுத்து, அடுத்துச் சரியான முடிவுகளை எடுத்தார். 1977இல் ஜனதாவோடு சேர்ந்தோம். பின்னர் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் அந்த ஆட்சி பட்டபாடு, ஒவ்வொரு அமைச்சரும் இழுத்த இழுப்பில் இந்தியாவே வீணாய்ப் போகிறது என்றுதான், "நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக! என்று, அப்போது விளக்கம் சொன்னார்: "தனிப்பட்ட முறையில் நானோ, என் கட்சியோ பட்ட துன்பங்கள் வேறு; மீண்டும் இந்த நாட்டுக்காக, இந்த ஆட்சி வர வேண்டும், ஒரு நிலையான ஆட்சி என்று விளக்கம் சொன்னார். அப்படி நடந்த அந்தக் காலகட்டம், இன்றைய தலைமுறை தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு காலகட்டம்.

பல இடங்களுக்குப் போய் "தலைவர் என்னைப் பேசச் சொல்கிறார். இன்றைக்குத் தம்பி இந்த வாய்ப்பை உருவாக்கி வைத்திருந்ததைக்கூடத் தலைவர் தான், "செல்லுங்கள் என்று சொல்லி, நான் விழுந்தடித்து வருகிறேன்.

இங்கே வந்து இந்த நிகழ்ச்சியில் நான் பங்கெடுத்தது, இங்கே இவ்வளவு திரளானவர்கள் இருப்பது ரொம்ப, ரொம்ப, ரொம்ப மகிழ்ச்சி! அவருடைய முயற்சி பாராட்டத்தக்கது. உள்ளபடியே ஒரு வரலாற்றுச் செய்தியைப் பத்திரப்படுத்தி ஆவணமாக வைத்திருக்கிறார். என்னதான் புத்தகமாக வந்தாலும், விஷுவல் மீடியா என்பது வேறு.

இப்போது நான் எழுதிய நூலையே நிறையப் பேர் "கொடுத்திருக்கிறேன், படித்துக்கொண்டு இருக்கிறேன் என்று இன்னும் சொல்கிறார்கள். நான் ஆரம்பத்திலேயே புரூஃப்ஆக இருக்கும்போதே சில பேரிடம் கொடுத்தேன். படித்துவிட்டு, உடனே தொழிற்கல்வித் தலைவர் சண்முகம், என்னுடன் வந்த கனிமொழி இவர்கள் எல்லாம் சொன்னது: "அண்ணே, தயவுசெய்து உடனே புத்தகமாகக் கொண்டு வந்துவிடுங்கள், சினிமா பார்க்கிற மாதிரி இருந்தது என்றார்கள்.

எவ்வளவு பேர் படிப்பார்கள்?

என்னை ரொம்ப நாளாக மனுஷ்ய புத்திரன்தான் "அதை எழுதுங்கள், எழுதுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருந்தார். பின்னர் அதை எழுதி, அந்த நூல் பெரிய அளவில் வெளியே போய்விட்டது. ஆனால் எத்தனை பேர் படித்தார்கள் என்பதுதான் முக்கியம். நிறைய நூலைப் பத்திரமாக அடுக்கி வைத்திருப்பார்கள். கலர் கலராக இருக்கும். எடுத்து ஒரு நாள் கூடப் பார்க்க மாட்டார்கள். வாங்கிவிட்டுப் போவார்கள், அல்லது "வீட்டில் இருக்கிறதைக் கொடுங்கள் என்று வாங்குவார்கள். அப்படியெல்லாம் உண்டு.

தொடர்ந்து விடாமல் படிப்பது யார் என்றால் ஐயா ஆசிரியர் வீரமணி, கலி பூங்குன்றன் ஐயா மாதிரி ஒரு சிலர் இருக்கிறார்கள். அதனால், இவர்கள் வெளியிட்ட இந்த 'வடுக்களை' எவ்வளவு பேர் படிக்கப் போகிறார்களோ தெரியாது, படிக்க வேண்டும்! ஏன் தெரியுமா? நான் இப்போது கிட்டத்தட்ட முக்கால்வாசி படித்துவிட்டேன், இந்தப் பயண நேரத்திலேயே.

அதில் சில பேர் சொல்லி இருக்கிற கருத்துக்கள் எல்லாம் ரொம்ப நெகிழ்வாக இருந்தது, ரொம்ப உணர்வுப்பூர்வமாக இருந்தது. பழைய நினைவுகள் பலவற்றை யாருக்குமே தெரிய முடியாததையெல்லாம் அவர்கள் அழகான கோணத்தில் சொல்லி இருந்தார்கள். அதுவே எனக்கு ரொம்பப் பயனுள்ளதாக இருந்தது.

தம்பிக்கு ஒரு நல்ல செய்தி. என்னுடன் மிசாவில் இருந்ததில் மீதி இருப்பது ஒன்பது பேர் என்று ஒரு கணக்குக்கு சொன்னேன், இன்னும் கம்மியாகக் கூட இருக்கலாம். கரூரில் இருக்கிற சுப.ராஜகோபால் என்கிறவர் காலையில் எனக்குத் தொலைபேசியில் பேசினார். "நான் டெல்லியில் இருக்கிறேன் என்றேன், "மும்பை போயிட்டுப் போகிறேன் என்று. "இல்லை தம்பி, இன்றைக்குச் சாயங்காலம் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறீர்கள்; அந்தப் புத்தகம் எனக்கு ஒரு காப்பி வேண்டும் என்று கேட்டார். "என் புத்தகத்தை நீ படித்தாயா? என்று கேட்டேன். "அதை அப்போதே படித்துவிட்டேன் என்றார். "சரி, அப்ப நான் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி இருக்கிறேன்.

அந்த அளவுக்கு ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி இருக்கிறது, இந்த நூல். உள்ளபடியே படித்தால் நிறைய தகவல்கள் இருக்கும். அதில் என்னுடையது இடம்பெறவில்லை என்பதை மீறி நான் ரசித்தேன். எல்லோருடைய எழுத்துக்களும் அதில் ரொம்ப, ரொம்ப, ரொம்ப அழகாக இருந்தது.

தலைவருக்கு மீண்டும் நன்றி, என்னை இங்கு போகச் சொன்னதற்காக! இவ்வளவு நேரம் காத்திருந்த உங்களுக்கு ரொம்ப ரொம்பப் பாராட்டும், நன்றியும்!

கொள்கையை கைவிடாமல் வைத்துக்கொள்வோம்!

காரணம், இது ஒரு சாதாரணக் கூட்டம் இல்லை. இந்த இடத்துக்கு போக்குவரத்து நெருக்கடி காரணமாக வந்து சேர்வதுதான் ரொம்பச் சிரமமாக இருந்தது. ஆனாலும் கூட, அதையும் மீறி இந்தக் கூட்டம் இவ்வளவு நேரம், நிறையப் பேர் உடல்நலன், வயது இதையெல்லாம் மீறி காத்திருந்தீர்கள். அதற்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

இளைய தலைமுறையினர் யாராவது வந்திருந்தால் தயவுசெய்து ஒன்றை புரிந்து கொள்ளுங்கள்: நாங்கள் பேசியது அரசியலுக்கு விளம்பரம் தேட அல்ல; அரசியல் கட்சி என்றால் இதுதான் என்பதை உணர்த்துவதற்காக! ஒரு கொள்கை, ஒரு லட்சியம், அதை எந்த நாளும் கைவிடாமல் வைத்துக்கொள்வதும், எந்த நிலையிலும் எது வந்தாலும் எதிர்த்து நிற்பதும் என்பதுதான் இயல்பாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே ஒரு கடுமையான காலகட்டத்தைக் கடந்து வந்திருக்கிறோம்.

விடுதலைப் போராட்ட வரலாறைப் போல, ஜனநாயகப் போராட்ட வரலாறு, அவசரநிலைக் காலம். அது தொடர்பான ஒரு நூலும் ஆவணப் படமும் வெளியாகியிருக்கிறது. மீண்டும் தம்பி ஸ்ரீதரனை எல்லோரையும் போலப் பாராட்டி, உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. உரையாற்றினார்.